மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

209—

சுற்றுச்சூழல் மாசினைத் தடுத்தல்

***50282—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, வைகை ஆற்றில் கழிவுநீர் கலப்பதால் ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வைகை ஆற்றில் தொழிற்சாலைக் கழிவுநீர் எதுவும் வெளியேற்றப்படுவது இல்லை. அன்றாடக் கழிவுநீர் வெளியேற்றத்தினைத் தடுப்பதற்காக மதுரை மாநகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மக்களின் குடிநீர் ஆதாரமாக வைகை ஆறு உள்ளது. மதுரை நகர் எல்லையான கோச்சடை முதல் விரகனூர் வரையிலும் 67 இடங்களில் கழிவுநீர் ஆற்றில் கலக்கிறது. குறிப்பாக, பந்தல்குடி கால்வாயிலிருந்து வெளியேறும் கழிவுநீர் ஆழ்வார்புரத்தில் நேரடியாக விடப்படுகிறது. இந்த இடத்தில்தான் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு கள்ளழகர் ஆற்றில் இறங்குகிறார். பந்தல்குடி கால்வாயைச் சீரமைக்க பணம்

2015 செப்டம்பர் 2]

வழங்குவதற்கு முன்வந்தும்கூட அதைச் சீர்படுத்தவில்லை என்று அறிகின்றேன். எனவே, வைகை ஆறு மாசுபட்டு, நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வு செய்ததில், மதுரை வைகை ஆற்றில் உப்புத் தண்ணீர் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். எனவே, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மதுரை மாநகராட்சி மற்றும் பொதுப் பணித் துறை, சுற்றுச்சூழல் துறை ஆகிய துறைகளின் அதிகாரிகளோடு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அமைத்து, வைகை ஆற்றில் கழிவுநீர் கலப்பதை நிரந்தரமாகத் தடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வணிகப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற அன்றாட கழிவுநீர் மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்மூலமாக சேகரிக்கப்படுகிறது. மதுரையின் தெற்குப் பகுதியில் அவனியாபுரம் மற்றும் வெள்ளக்கல்லில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திலும், மதுரையின் வடக்குப் பகுதியில் சக்கிமங்கலத்தில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 47.5 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திலும் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தில் பாசனத்திற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த இரு சுத்திகரிப்பு நிலையங்களும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயக்கப்படுகின்றன. மாநகராட்சியில் மொத்தம் உள்ள 100 வார்டுகளில், தெற்குப் பகுதியில் உள்ள 47 வார்டுகளின் கழிவுநீர் அவனியாபுரம் சுத்திகரிப்பு நிலையத்திலும், வடக்குப் பகுதியில் உள்ள 25 வார்டுகளின் கழிவுநீர் சக்கிமங்கலம் சுத்திகரிப்பு நிலையத்திலும் சுத்திகரிக்கப்படுகிறது. மீதமுள்ள

புதிதாகச் சேர்க்கப்பட்ட 28 வார்டுகளின் கழிவுநீரை மாநகராட்சிக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பதற்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை 617.30 கோடி ரூபாய் செலவிலே மத்திய smart city திட்டத்தின்கீழ் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், கோவிலூரில் அமைந்துள்ள* chemical *தொழிற்சாலை 1977 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அங்கிருந்து வெளிவரும் கழிவுநீர், கோவிலூர் பெரிய கண்மாயில் கலந்து, நீர் மாசுபட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக புகார்கள் வந்தன. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 13-2-2015 ஆம் தேதியன்று ஆய்வு செய்ததன் அடிப்படையில், 16-2-2015 அன்று தொழிற்சாலை மூடப்பட்டது. அதற்குப் பிறகு, பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, 30-6-2015 முதல் அந்த ஆலை மீண்டும் இயங்கி வருகிறது. ஆனால், கழிவுநீர் அந்த ஆலையைவிட்டு வெளிவரக் கூடாது என்ற நிபந்தனையை மீறி, இப்பொழுதும் பெரிய கண்மாயில் கழிவுநீரை விடுகிறார்கள். குறிப்பாக, காரைக்குடியில் உள்ள சம்பை ஊத்துதான் குடிநீருக்காகப் பயன்படுத்தக்கூடிய ஊத்து. இந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் லிட்டருக்கும் மேற்பட்ட தண்ணீரை சம்பை ஊத்திலிருந்துதான் எடுக்கிறார்கள். அந்த ஊத்து நீரில் இந்தக் கழிவுநீர் கலந்து வருவதனால் தொண்டைப் புண், குடல் புற்று நோய், கருச்சிதைவு, நுரையீரல் பாதிப்பு, கிட்னி பாதிப்பு, இப்படி ஏராளமான பாதிப்புகள் ஏற்படுவதுடன், 98 சதவீதமான மக்களுக்கு தோலில் அரிப்பும் ஏற்படுகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை, சுருக்கமாகப் பேசி, உரையை முடியுங்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளை இந்த ஆலை நிருவாகம் ஏற்காமல் இருப்பதால்,*

2015 செப்டம்பர் 2]

இந்த பாதிப்பு ஏற்படுகின்ற காரணத்தினால், மீண்டும் ஆய்வு செய்து, அங்குள்ள மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: அந்த Chemical கம்பெனியின் பெயர் என்ன?

திரு. இரா. அண்ணாதுரை: Tamil Nadu Chemical Products Limited என்ற தொழிற்சாலை சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. அங்கே ஏற்கெனவே ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அங்கு விதி மீறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே Chemical Company-க்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி கொடுக்கின்றபோது, அந்தத் தொழிற்சாலை, தான் வெளியேற்றுகின்ற கழிவுநீரை முறையாக சுத்திகரிப்பு செய்து, மேலாண்மை செய்து தொழிற்சாலையினுடைய தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற நிபந்தனையோடுதான் அனுமதி கொடுக்கிறது. ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தொழிற்சாலையை ஆய்வு செய்து பார்க்கிறபோது, ஒரு முறை விதிமுறை மீறப்பட்டபோது, அந்தத் தொழிற்சாலையினுடைய மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. மீண்டும் அவர்கள் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய உரிய இயந்திரங்கள் அமைத்து, முறையாக நாங்கள் சுத்திகரிப்பு செய்வோம் என்று எங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலே வேண்டுகோள் வைத்தபோது, அந்த ஒப்பந்தத்தை ஏற்றுத்தான் மீண்டும் அந்த ஆலையை இயக்க அனுமதி கொடுத்திருக்கிறோம். தற்போது அந்த ஆலை வெளியேற்றுகிற கழிவுநீரை, அந்த ஆலையே சுத்திகரிப்பு செய்து, மறு உபயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த ஆலை, சுத்திகரிப்பு செய்யாமல் கழிவுநீரை ஆற்றிலே கலக்க விடுகிற ஒரு சூழ்நிலை இருக்குமானால், உடனடியாக ஆய்வு செய்து, அந்த ஆலையின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.